## இறுதிச் செபம்:

அதிச உறுப்பினர் ஒருவரை செபம் சொல்ல அழைக்கலாம்.

## முடிவு பாடல்:

### ஆயிரம் நன்றி நான் கூறிடினும்

ஆயிரம் நன்றி நான் கூறிடினும் - எந்தன்
ஆயனுன் கருணையின் இணையாமோ 2

1. தேவனும் பாசமே நான் அறிந்தேன் - என்றும்
   தேடியே இன்பமும் நான் அடைந்தேன் 2
   ஆருயிர் உன்னுயிர் மாட்சிமைக்காய் - தந்து
   ஆறுதல் உன்னிடம் கண்டு கொண்டேன்

2. பூவினில் பல்லுயிர் வாழ வைத்தாய் - நாளும்
   போதிய அன்னமும் நீயளித்தாய் 2
   பாவியான் ஆத்தும வாழ்வுணவாய் - இன்றே
   பாரெல்லாம் காத்திடும் நீயமைத்தாய்

3. வாழ்வென வந்தான் வானுணவே - எனைக்
   சூழ்வினை வென்றிடும் உன் கரமே 2
   ஏழ்மை சேர் நெஞ்சினிலே வாழ்பவனே - உன்னை
   தாழ்மையாய் பாடுவேன் பாவிசைத்து





INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம் | ஏப்ரல் 2018


# அதிசசிந்தனை



## நம்பிக்கை: கிறிஸ்துவிற்குள் மீட்கப்பட்டோம்

+ திருக்குடும்பச் செபத்தைக் கூறவும் (பக் 17)

**நோக்கம்:**

அனைவருக்காகவும் மீட்பு வந்தது. கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளுக்கு நன்றி. மீட்பைத் தேர்ந்து கொள்வது அவரவரின் விருப்பம். ஆனால் அதனை கண்டிப்பாக பெற வேண்டும். காரணம் மீட்பு நமக்கு ஒரு கொடையாக அருளப்பட்டுள்ளது. இக்கொடையை நம் உயிர்மூச்சு உள்ளவரை பெற்றுக் கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்.

## அறிமுகம்:

கிறிஸ்து உயிர்ப்பினால் பாவத்தின் மீதும் சாவின் மீதும் வெற்றிக் கொண்டார். நாம் தினமும் பாவச் செயல்களையும் சோதனைகளையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறோம். நம்மை எதிர்ப்பவர்களை அன்பு செய்ய முடியும்? நம் முகத்தில் உமிழ்ந்தவரை அன்பு செய்ய முடியுமா? இயேசு முடிவில்லா வெற்றியை நமக்குப் பெற்றுத் தந்துள்ளார். கடவுள் நம்மில் செயலாற்ற நம்மை ஒப்புக் கொடுப்போம் இயேசுவோடு நின்றால், அவரின் வெற்றியில் நாமும் பங்குப் பெறுவோம்.



## ஆரம்பப் பாடல்:

### உலகம் போற்றும் இறைவனே

உலகம் போற்றும் இறைவனே
உணவாய் எழுந்து ராஜனே
வணங்கி உம்மை வாழ்த்துவோம்
வணங்கி உம்மை ஏத்துவோம்

1. இறைவா உம்மை உலகிலே
என்றும் துதித்து போற்றுவோம் 2
உறைவாய் எமது நடுவிலே
உலகோர் பாவம் போக்கவே

2. அன்பைத் தேடி அலைகின்றீர்
அன்பை இன்று அளிக்கின்றோம் 2
அன்பை ஏற்று இறைவனே
இன்பம் எமக்கு வழங்குவீர்

3. மனிதர் பூவில் மகிழவே
மறைந்த நீரும் வாழ்கிறீர் 2
மனிதராக்க மனிதரை
பொழிவீர் அருளே என்றுமே

## தொடக்கச் செபம்:

செபம் சொல்ல அதிச உறுப்பினர் ஒருவரை அழைக்கலாம்

## உரையாடல்:

### "அவர் இங்கு இல்லை"

பழங்கால "ஏழு உலக அதிசயங்களில்" ஒன்றான உலகப் புகழ் பெற்ற எகிப்திய பிரமிட்டுகள் உள்ளன. ஆனால் இறை எகிப்பதிய பாரவோன் அரசர்களின் பதப்படுத்தப்பட்ட சடலங்களைக் கொண்ட பெரிய கல்லறைகளே. இங்கிலாந்தின் வெஸ்ட்மினிஸ்டர் அபே கட்டிடமும் புகழ் பெற்றது.

பல ஆயிரம் மக்கள் வருகையளிக்கும் இடம், காரணம் பல புகழ் பெற்ற எழுத்தாளர்கள், சிந்தனைவாதிகள், அரசியல்வாதிகளின் கல்லறை இங்கு உள்ளன.

எருசலேம் நகரிலும் ஒரு கல்லறை கோவில் உள்ளளது. உலகெங்கிலும் இருந்து பலர் யாத்ரீகர்கள் வருகிறார்கள். ஆனால், இங்கு காலியான கல்லறை மட்டுமே உள்ளது. இக்கோவிலின் வாசற்படியில் "அவர் இங்கு இல்லை" என்ற வசனம் எழுதப்பட்டிருக்கும்.

இது இன்றும் புகழ்பெற்ற இடம். காரணம், மரணத்தை வென்று உயிர்தெழுந்த இயேசு கிறிஸ்து புதைக்கப்பட்ட இடம், காலியான கல்லறை, தம் சீடர்களுக்குச் சொன்னபடி, இயற்கை விதிக்கு மாறாக, மரணத்தை வென்று தாம் கடவுள் என்பதை நிரூபித்துள்ளது அவரது செயல்.

ஈஸ்தர் கொண்டாட்டத்தின் வழியாக இந்த அற்புத நிகழ்வில் மகிழ்ச்சிக் கொள்வோம். வலியும் வேதனையும் நிறைந்த உலகில், இவ்விழா நம்பிக்கையையும் ஆறுதலையும் அளிக்கிறது. வாழ வேண்டும் என்ற ஆர்வத்தை வளர்க்கிறது.

நமது ஆன்மாவில் இயேசு மெய்யாகவே வாழ்கிறார் என்பது நமது விசுவாசம். இயேசு திருச்சபையின் உயிர்மூச்சாக இருக்கிறார். திருவருட்சாதனங்களில் பிரசன்னமாக இருக்கிறார். விண்ணகம் அவரால் நிறைந்துள்ளது. இவையனைத்தும் நமது கிறிஸ்துவ வாழ்விற்கு ஒரு நம்பிக்கையைத் தருகிறது.

அனைத்தையும் கடந்த கடவுளாக இருக்கும் நம் உயிர்த்த இயேசுவின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை, சோதனைகளை மேற்கொள்ள நமக்குப் பலத்தைக் கொடுக்கிறது. அச்சத்தையும் பயத்தையும் போக்குகிறது. அயர்லாந்து அப்போஸ்தர் புனித பெட்ரிக் அவர்களின் செபம், "கிறிஸ்து எனக்கு முன், கிறிஸ்து என் பக்கத்தில், கிறிஸ்து என்னுடன், என்னை விட்டு அகலாதேயும்".

(ஈஸ்தர் ஞாயிறு 2017, வத்திகான் வானொலி)

அருகில் உள்ளவருடன் கலந்து பேசவும். மீண்டும் மற்றவருடன் கலந்து பேசவும்.

- அன்னமேரி, மைவா ஆகியோரின் எதிர்பாராத சந்திப்பில் உங்களை அதிகம் தொட்டது எது?
- கிறிஸ்துவின் சாட்சியாக இருந்த தருணத்தை நீங்களும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## இறைவார்த்தை:

வாசகம்: 1 கொரி. 15: 55-57

சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? பாவமே சாவின் கொடுக்கு. பாவத்துக்கு வலிமை தருவது திருச்சட்டமே. ஆகவே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு நன்றி!

## சிந்தனை:

1. தூய ஆவியாரை நோக்கி செபியுங்கள். (மனம் திறந்து இறை இயேசுவை சந்திக்கவும், அவரால் ஆட்கொள்ளப்பட்டு வல்லமைப் பெற)
2. வாசகப் பகுதியை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும் (ஓவியங்கள், படங்கள், காணொளி, நாடக வடிவம் போன்றவைகளைப் பயன்படுத்தலாம்...)
3. இறைவார்த்தையில் நிலைத்து அமைதியாக இருக்கவும்.
4. எந்த வார்த்தைகள், வசனங்கள் அல்லது கருத்துகள் என் மனதைத் தொட்டது? (குறிப்பிடவும்).
5. தூய ஆவியானவர் கூறும் செய்தி என்ன அல்லது எனக்குக் கூறும் செய்தி என்ன? (குறிப்பிடவும்).
6. சிறியக் குழுகளில் பகிர்ந்து கொள்ளவும் (3-4பேர்) 4 & 5 எண் கேள்விகள் குறித்து.

## செயல்:

இந்த ஏப்ரல் மாதம் முழுவதும் (உங்கள் செயல்களை எழுதவும்)